# தமிழ் ஆவண மாநாடு
# 2013

## ஆய்வுக் கட்டுரைக் கோவை

NOOLAHAM
FOUNDATION

நூலகம் நிறுவன வெளியீடு

**Copyright © 2013 by Noolaham Foundation**

All text within this publication is available under the Creative Commons Attribution - NonCommercial - NoDerivs license.

For more Information, Visit http://creativecommons.org/licenses/by-nc-nd/3.0/

| | | |
|---|---|---|
| Title | : | Tamil Documentation Conference - 2013<br>Aaivu Kaddurai Kovai |
| First Edition | : | 2014 |
| Published by | : | Noolaham Foundation |
| Printed by | : | Unie Arts (Pvt) Ltd.,<br>48B, Bloemendhal Road, Colombo - 13.<br>Tel : 011 - 2330195 |
| No of pages | : | XVI + 644 |
| No of Copies | : | 300 |
| Size | : | 6.75 x 9.5 |
| Price | : | Rs. 2000.00 |
| ISBN | : | 978-955-4918-00-9 |

**COVER IMAGE CREDITS**

| | | |
|---|---|---|
| Karagattam | : | S. Siva Saravanan |
| Old books on shelves | : | Adam Woolfitt/Corbis |
| Manuscript | : | Vignesh Rana |
| Paddy Field | : | Sudipto Sarkar |
| Farmer | : | Prashanth Baradwaj |

*Cover & Inner Seperation Pages designed By : E. Arjunar*

# கிறிஸ்தவத்தின் வருகை இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய பன்முகத் தாக்கம்

மேரி வினிஃபிரீடா சந்திரசேகர்

இலங்கை நாட்டைத் தம்வசப்படுத்திக் கொண்ட ஐரோப்பிய நாட்டவர்களான போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றோர் இலங்கையில் தமது ஆட்சியை உறுதியுடன் நிலைநாட்டிக் கொள்வதற்கெனப் பல ஊடகங்களைக் கையாண்டார்கள். அவ்வாறு அவர்களால் கையாளப்பட்ட ஊடகங்களுள் மதத்தைப் பரப்புதல் என்னும் விடயம் சிறப்பிடம் பிடித்தது. அதற்கென அவர்கள் ஐரோப்பாவில் நிலவிய அரசியல் நடைமுறைகளை இலங்கையில் புகுத்த முற்பட்டனர். ஐரோப்பாவில் மன்னர் எந்த மதத்தைப் பின்பற்றுகிறானோ, அதனையே மக்களும் பின்பற்ற வேண்டும் என்ற நிலை காணப்பட்டது. எனவே இலங்கையிலும் மதத்தைப் பரப்புவதில் ஆர்வத்துடன் செயற்பட்ட அவர்கள், ஆட்சியாளர்களை மதம் மாற்றுவதன் மூலம் மக்களை தம் மதத்தில் இணைக்கலாம் எனும் தந்திர நோக்குடன் செயற்பட்டனர்.

மதத்தைப் பரப்புதலை மட்டுமே நோக்காகக் கொண்டிராத இவர்கள் இலங்கை நாட்டைப் பிடித்தல், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுதல், இலாபத்தைப் பெற்றுக்கொள்ளுதல் என்னும் பெரும் எதிர்பார்ப்புக்களுடனும் இருந்துள்ளனர். இவர்களின் வருகை இலங்கைவாழ் தமிழ் மக்களின் வாழ்வில் பன்முக ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. சமயம் மட்டுமன்றி சமூகத்தின் ஏனைய துறைகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை ஆய்வினூடாக அறியலாம்.

இவ் ஆய்வில் கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன்னரான இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்க்கை பின்னணியை ஆய்வு செய்வதன் மூலம், கிறிஸ்தவத்தின் வருகைக்கு பின்னரான மாற்றங்களையும், வளர்ச்சி, தளர்ச்சி நிலைகளையும் தெளிவாக நோக்கக் கூடியதாயிருக்கும்.

முஸ்லீம்களின் வியாபாரக் கப்பல்களைக் கைப்பற்றும் நோக்குடன் லோறொன்சோ டி அல்மெய்டா தலைமையில் வந்த போத்துக்கேயக் குழுவினர் எதிர்பாராத விதமாகப் புயலில் சிக்கி இலங்கையின் காலித்துறைமுகத்தை அடைந்துள்ளனர். வியாபார நோக்கம் கருதி எதிர்பாராத விதமான இக்குழுவின் வருகை இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வில் ஒரு சில அம்சங்களில் மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக இலங்கை மக்களிடையே கத்தோலிக்க மறை இவர்களின் வருகையின் பின்னரே பரப்பப்பட்டுள்ளது.

தொடர்ந்து போத்துக்கேயருக்குப் போட்டியாக ஒல்லாந்தர் கீழைத்தேய வர்த்தகத்தை கைப்பற்றுவதற்கென இலங்கைக்கு வருகை தந்தனர். இவர்களால் இலங்கையில் புரட்டஸ்தாந்து மதம் பரப்பப்பட்டது. இக்காலப் பகுதியில் மதம் மாறியவர்கள் பல சலுகைகளையும் பெற்றுக் கொண்டனர். பொருளாதார ரீதியிலும் பாரிய மாற்றத்தினை இவர்கள் ஏற்படுத்தியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஒல்லாந்தரின் ஆட்சியைத் தொடர்ந்து பிரித்தானியர் இலங்கை முழுவதையும் தமது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தனர். இக்காலப்பகுதியில் மக்களுக்கு "மதச்சுதந்திரம்" வழங்கப்பட்டிருந்தது. ஆங்கிலக் கல்வியையும், அரச பதவிகளையும் பெறுவதில் ஆர்வங்கொண்ட மக்கள் அதற்கென மதம் மாறினர். இவர்களின் ஆட்சிக்காலத்திலும் இலங்கைத்தமிழ் மக்கள் வாழ்வில் பல்துறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது தெளிவு.

## I. கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன்னர் இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்க்கைப் பின்னணி.

இலங்கையில் சிங்களவர், தமிழர் என இரு பிரிவினர்களைக் காணக்கூடியதாக இருப்பதுடன், அவர்களின் பூர்வீகத்தை ஆய்வு செய்கையில் அவர்கள் உண்மையில் இலங்கையைத் தமது பூர்வீகமாகக் கொண்டவர்களெனக் கூறமுடியாது. இலங்கைவாழ் சிங்கள மக்களின் மூதாதையர் கி.மு.6 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து விஜயன் தலைமையில் வந்து குடியேறியவர்களாவர்.[1] தமிழர் தென்னிந்தியாவிலிருந்து அவ்வப்போது வந்தவர்கள், படையெடுப்பாளர்கள் போன்றோரின் வழித்தோன்றல்களாவார்.[2] இத்தகைய பூர்வீக வரலாற்றைக் கொண்ட இலங்கை வாழ் மக்களின் சமூக, சமய, பண்பாட்டுப் பின்னணிகள் எவ்வாறு இலங்கையில் கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன் காணப்பட்டதென்பதைத் தொடர்ந்து நோக்குவோம்.

### I.I. சமூகம்

இலங்கையில் இயக்கர், நாகர் என்ற இரு பிரிவினர் ஆட்சி செய்துள்ளனர். இதில் நாகர் என்பவர் மங்கோலிய இனத்தைச் சேர்ந்த திபேத் தேவவர்ம குலத்தவர்களாகவும், கி.மு 400 ஆம் ஆண்டளவில் மத்திய ஆசியாவிலிருந்து வந்து இந்தியாவில் குடியேறியவர்கள். ஆரிய குடியேற்றம் அதிகரிக்கத் தொடங்கவே இவர்கள் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் வந்து குடியேறினார்கள். இலங்கையில் மத்தியிலும், தெற்கிலும் வசித்த இயக்கர் ஆரியரின் வருகைக்கு முன்னர் இலங்கைக்கு வருகைத் தந்தனர்.[3]

அக்கால சமூகத்தில் சாதி அமைப்பு முறை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்ட விடயமாகும். காலந்தோறும் ஏற்பட்டு வந்த பல்வேறு விதமான நெருக்கடிகளின் போதெல்லாம் இந்து மதம் சாதியை கைவிடுவது போல காட்டிக் கொண்டாலும், அது தற்காலிக ஏற்பாடாகவே இருந்து வந்துள்ளது. அக்காலத்தில் சாதியமைப்பு அந்தஸ்தை காப்பாற்றும் தளமாகவே காணப்பட்டது. சமயமும் சாதி அந்தஸ்தை காப்பாற்றும் தளமாக இருந்துள்ளதுடன் சாதிக்கொரு திருவிழாக்கள் வழிபாடுகளிலும் காணப்பட்டன.[4]

---

1 புஸ்பரத்தினம், P., (2004). *இலங்கையர்கள் பற்றிய கல்வி* (Sri Lankan Studies) வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், ப. 03.

2 மேலது, ப. 03.

3 குகபாலன், கா., (2000). *இலங்கை பழங்குடிகள்* (வனக்குறவர் வாழ்வியல் ஆய்வு) பரணன் அசோசியேட்ஸ் பிறைவேட் லிமிடெட், கொழும்பு, ப. 24.

4 இரகுநாதன்., ம. (2006). "யாழ்ப்பாணத்தில் சாதியும் மதமும் ஈழத்து தமிழ் நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேடல்", *யாழ்ப்பாணம் மொழியும் வாழ்வும்*, கரிகணண் பிரிண்டேர்ஸ், இல 424, காங்கேசன்துறைச் சாலை யாழ்ப்பாணம், ப. 88.

இக்காலத்தில் விவசாயமும், கைத்தொழிலும் வளர்ச்சியடைய ஆரிய சக்கரவர்த்திகள் உதவினர். விவசாயமே பெரும்பான்மை மக்களின் தொழிலாக இருந்துள்ளது. இதன்போது உணவுப் பொருட்கள், தானியங்கள் என்பவற்றையே உற்பத்தியாக்கினர். இவ்வாறான ஒரு சமூகப்பின்னணியே கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன் இலங்கையில் நிலவியது.

## 1.2. சமயம்

இந்து, பௌத்த மதங்களுக்கே இலங்கையில் தொன்மையான வரலாறு உண்டு. இலங்கையின் ஆதிமக்களான இயக்கர் "இயற்கை" வழிபாட்டையும் நாகர் "நாக" வழிபாட்டையும், சிவ வழிபாட்டையும் கொண்டிருந்தனர்.[5] கி.மு 6 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு 3 ஆம் நூற்றாண்டு வரையுமான காலப்பகுதியில் இலங்கை மக்களின் ஒரு குறிப்பிட்ட பகுதியினரிடையே இந்து மத நம்பிக்கை இருந்துள்ளது.[6] இந்துக்களின் வழிபாட்டு முறையில் இயற்கை வழிபாட்டுமுறை அக்காலப்பகுதியில் காணப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்துக்களிடையே இரு விதமான வழிபாட்டு முறைகள் காணப்பட்டன. அவை ஆகம வழிபாட்டு முறை, கிராமிய வழிபாட்டு முறை எனலாம்.

கி.மு. 6 ஆம் நூற்றாண்டு ஒரு முக்கிய காலப்பகுதியாகும். இக்காலத்தில் இந்தியாவில் வைதீக மதத்துக்கு எதிராக புத்தரும், மகாவீரரும் செய்த புரட்சியால் பௌத்த, சமண மதங்கள் தோன்றின. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் போர் நடவடிக்கை மூலம் கலிங்க நாட்டை வெற்றி கொண்ட அசோகச்சக்கரவர்த்தி பௌத்தத்தை பின்பற்றினார். அத்துடன் அம்மதத்தை உலக நாடுகளுக்கு பரப்பும் முயற்சிகளிலும் ஈடுபட்ட இவர், இதற்கென தூதுக்குழுக்களை அனுப்பினார். மகிந்த தலைமையில் இலங்கைக்கு வருகை தந்த தூதுக்குழுவை இலங்கை மன்னன் வரவேற்றது மட்டுமல்லாது தானும் அம்மதத்தை பின்பற்றினான். இப்பின்னணியில் குறுகிய காலத்தில் செல்வாக்குடைய மதமாக பௌத்தம் திகழ்ந்தது.

## 1.3. கல்வி

கிறிஸ்தவத்தின் வருகைக்குமுன் இலங்கையின் கல்விநிலையை நோக்கின், இங்கு குரு, சிஷ்ய முறையிலான கல்விநிலையே காணப்பட்டது. கிராமங்கள் தோறும் பாடசாலைகள் காணப்பட்டன.[7] இப்பாடசாலைகள் கிராமத்து பெரிய மனிதன் வீட்டுத் திண்ணைகள், கோயில் மண்டபங்கள் என்பவற்றில் நடைபெறுவதுண்டு. இவ்வாறு திண்ணைகளில் நடைபெற்று வந்த இப்பள்ளிக்கூடங்கள் "திண்ணைப்பள்ளிக்கூடம்" என்றழைக்கப்பெற்றன. அக்காலத்தில் காகிதம், பேனா, பென்சில், புத்தகங்களுக்கான வசதிகள் காணப்படாமையினால் மாணவர்கள் தரையில் மணலைப் பரப்பி கைவிரலினாலேயே எழுதினர். எழுத்துக்களைக் கற்றவர்கள் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, வாய்ப்பாடு முதலியவற்றை மனப்பாடம் செய்வார். இதன் பின் திவாகரம், நிகண்டு, நன்னூல், சின்னூல் ஆகிய நூல்களை மனப்பாடம் செய்வதுடன் ஏடுகளில் எழுத்தாணியால் எழுதிப்பழகுவர்.[8]

---

5 குணராசா, க., (1996), *ஈழத்தவர் வரலாறு* (கி. பி.5ம் நூற்றாண்டிலிருந்து கி. பி 1621 ஆம் ஆண்டு வரை), பூபாலசிங்கம் பதிப்பகம், கொழும்பு, ப. 18.

6 மேலது, பக். 18-19.

7 வெங்கடசாமி சீனி., (2003), *19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்*, அன்னை இல்லம், சென்னை, ப. 75.

8 மேலது, பக். 75- 78.

இக்காலப்பகுதியில் திண்ணைப் பள்ளிக்கூடம் மட்டுமல்லாது குருகுலப் பள்ளிக்கூடங்கள், கோயில் மடப்பள்ளிக்கூடங்கள், இராப் பள்ளிக்கூடங்கள், நிலாப்பள்ளிக்கூடங்கள், மரநிழல் பள்ளிக்கூடங்கள் என பலவிதமான ஒழுங்கமைப்புக்கள் ஏட்டுக்கல்வியை வழங்கி வந்தன. அதுமட்டுமல்லாது இலக்கியக்கல்வி, மருத்துவக்கல்வி, சோதிடக்கல்வி, என்றவாறு ஏட்டுக்கல்வியில் சிறப்பார்ந்த துறைகள் அவற்றிற்குரிய வல்லுனர்களிடம் கற்கும் மரபு காணப்பட்டது.[9]

திண்ணைக் கல்விக்கூடங்களில் மனப்பாடம் செய்யும் முறையே அதிகம் பின்பற்றப்பட்டு வந்தது. அக்காலத்தில் இவ்வாறான திண்ணைப் பள்ளிக்கூடங்களில் பெண்கள் படித்ததற்கான சான்றுகள் இல்லை. "குருகுல" கல்வியானது ஒரு குருவின் கீழ் இயங்கியது. இம்முறையில் மாணவர்கள் மருத்துவம், நடனம், இசை, இசைக்கருவிகளை இயக்குதல் போன்ற பயிற்சிகளையும் பெற்றுக்கொண்டனர். சீடர்கள் குருவுடன் இருந்து, அவருக்குப் பணிவிடை புரிந்து அவர்களிடமிருந்து பாடங்களைக் கற்றனர்.[10] நிலாப்பள்ளிக்கூடங்களிலும் மாணவர்கள் கல்வி பயின்றுள்ளனர். நிலவின் பிரகாசமான ஒளியில் நடாத்தப்பட்ட இப்பாடசாலைகளில் இருவிதமான கற்பித்தல் முறைகள் காணப்பட்டன. அவை சிறந்த இலக்கியங்களை விளங்கப்படுத்துதல், உடற் கலைகளை கற்பித்தல் என்பனவாகும். இக்காலப் பகுதியில் பெண் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. பெண்கள் வீட்டு வேலைகளை செய்பவர்களாகவே காணப்பட்டார்கள் குடும்ப உறுப்பினர்களின் தேவைகள் சிலவற்றை நிவர்த்தி செய்ய கை வைத்தியம் அல்லது மருத்துவிச்சி மரபுசார் கல்வி வழங்கப்பட்டுள்ளது. குடும்பத்தை பாதுகாத்தல், பராமரித்தல் என்னும் விடயங்களை முக்கியத்துவப்படுத்தும் நோக்கில் அனுபவக் கல்வியே ஆண்களிலும் பார்க்க பெண்களுக்கு வழங்கப்பட்டது.[11]

### 1.4. பண்பாடு

பண்பாடானது மக்களனைவரும் கூட்டாக சேர்ந்து செயற்படும் போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலியவற்றின் தொகுதியாகவும் காணப்படுகின்றது.[12]

கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த இயக்கரும், நாகரும் 'ஈழு' என்ற நிறைவற்ற மொழியை பேசி வந்தனர். நாகரின் மொழியும் தமிழாகவே இருந்திருக்க வேண்டுமென்று சிலர் ஊகிக்கின்றனர். யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர்களும் தமிழை வளர்க்க பேரார்வம் காட்டி வந்தனர். யாழ்ப்பாண அரசு நிலைத்திருந்த அறுநூறு ஆண்டு காலத்தில் தமிழ் நன்கு வளர்க்கப்பட்டது.[13] எனவே இக்காலப்பகுதியிலும் தமிழ் மொழி பயன்பாட்டில் இருந்துள்ளது எனலாம்.

---

9 சபா ஜெயராசா. (2000) *யாழ்ப்பாணத்து மரபு வழிக் கல்வி*. போஸ்கோ பதிப்பகம். நல்லூர். ப. 22.

10 Anton Mathias, (1992), *The Catholic Church in Jaffna*, (1875-1925) Good Shepherd Center , Ealalai, P. 53.

11 கணபதிப்பிள்ளை, க., (1962). *ஈழுத்து வாழ்வும் வளமும்*, சித்ரா பிரிண்டேர் கிராபி, மெட்ராஸ், பக். 53-56.

12 பத்தவத்சல பாரதி, (1990). *பண்பாட்டு மானிடவியல்*, மாணிக்கவாசகர் ஆப் செட் பிரிண்டர்ஸ், சென்னை, பக். 51-52.

13 கந்தவனம், வி., (2002). *பொன்விழா மலர்: யாழ் மாநகராட்சி மன்றம்* ( 1949-1999), போஸ்கோ பதிப்பகம், நல்லூர், பக். 4- 5.

இலங்கைத் தமிழ் மக்களின் உணவுப் பழக்கவழக்கத்தை நோக்குவோமாயின் இவர்கள் அரிசிச்சோற்றையே பெரும்பாலும் உண்டு வருவர். நாட்டிலே ஆங்காங்கே வளரும் சாமை, தினை, குரக்கன், சோளம் முதலிய சிறு தானியங்களையும் அவர்கள் உண்டு வந்தனர். ஆரம்ப காலத்தில் அரிசிச்சோறு முதன்மையான உணவாக இருந்திருப்பினும் தினைச்சோறு, வரகுச்சோறு முதலியவற்றையே உண்டு வந்தனர். இவற்றை விடவும் பனை ஒடியல் பிட்டு, பனை ஒடியல் கூழ், பனங்காய், பனாட்டு, குரக்கன் பிட்டு, தோசை, இட்டலி என்பவற்றையும் உணவாகக் கொண்டனர். பழஞ்சோறு காலை உணவாக இருந்தது. பால் அல்லது மோர் குடிக்கும் பழக்கமும் காணப்பட்டது. இக்காலப்பகுதியில் மரக்கறி உணவையே அதிகமாக உண்ணும் வழக்கம் காணப்பட்டது.

மக்களின் பண்பாட்டு அம்சங்களில் முக்கியமான ஒன்றாகத் திகழ்வது வாழ்க்கைப் பழக்கவழக்கங்களாகும். இந்த வகையில் ஆண்கள் கன்னக்குடுமி முடிந்து வந்தனர். ஒரு ஆண் திருமணம் முடிக்கும்போது சீதனம் வழங்கும் முறையும், பெண் சீதனம் கொடுத்து மணம் செய்யும் முறையும் காணப்பட்டது.

கலை அம்சங்களை நோக்குகையில் அக்காலத்தில் நாட்டுக்கூத்துக்கலை சிறப்புற்றுத் திகழ்ந்தது. இந்நாட்டுக் கூத்தானது கோயில் நேர்த்திக் கடனுக்காக ஆடப்பட்டவையாகக் காணப்பட்டது. அரங்கேற்றப் பருவத்தில் கோயில்களுக்கு அருகில் கொட்டகை அமைத்து, அதில் களரி கட்டுவர். கொட்டகை வட்டமாக அமைந்திருக்கும். இக் கொட்டகைகள் நான்கு புறமும் திறந்திருக்கும். எனவே பார்வையாளர் கொட்டகையை சுற்றி இருந்து பார்க்க இலகுவாக அமைந்திருக்கும். கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன் இவ்வாறான பண்பாட்டு பின்னணியையே நிலவியது.

## 2. கிறிஸ்தவத்தின் வருகைக்கு பின் இலங்கை தமிழ் மக்களின் வாழ்க்கை

### 2.1. இலங்கையில் போத்துக்கேயரின் ஆளுகை (கி. பி 1505– 1658)

1498 இல் வஸ்கொடகாமா தலைமையில் கப்பற்படைகள் இந்தியாவின் கள்ளிக்கோட்டையை அடைந்தன. இவர்கள் இந்தியாவில் தம் நிலையை உறுதிப்படுத்தினர். இந்தியாவில் இராஜ பிரதிநிதியாக நியமனம் பெற்ற லொறன்சோ டி அல்மெயிடா முஸ்லீம்களின் வியாபாரக் கப்பல்களை கைப்பற்றும் நோக்குடன் அனுப்பப்பட்டார். அவர் சென்ற படகு புயலில் சிக்கி எதிர்பாராத விதமாய் 1505 இல் இலங்கையின் காலித்துறைமுகத்தை வந்தடைந்தது.[14] இவர்களின் வருகையின் பின்னர் இலங்கைத் தமிழ் மக்கள் வாழ்வில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

போத்துக்கேயர் வர்த்தக நோக்கம் கருதி இலங்கையில் தமது ஆட்சியை உறுதியுடன் நிலைநாட்ட முயன்றனர். எனவே இலகுவான வழிமுறைகளை அதற்கென பயன்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டினர். இலங்கையில் தமது மறையை பரப்பினால் இலங்கையின் ஆட்சியுரிமையை தம்வசப்படுத்திக்கொள்ள முடியும் என்ற நோக்குடன் மறைபரப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பதில் கருத்து வேறுபாடில்லை.

---

14 கிருஷ்ணராசா, செ., (2002). *இலங்கை வரலாறு- பாகம் II*, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், யாழ்ப்பாணம், பக். 60- 62.

## 2.2. சமயம்

இலங்கையில் போத்துக்கேயரின் வருகையுடன் கத்தோலிக்க மறை பரப்பப்பட்டது. இம் மறைசார் உண்மைகளை மக்களிடையே எடுத்துச் செல்வதற்கென மிஷனரிமாரும் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர். அந்த வகையில் பிரான்சிஸ்கன், இயேசு சபை, டொமினிக்கன், அகுஸ்தினர், போன்ற சபையினர் இலங்கையில் மறை பணியாற்றுவதற்கென வரவழைக்கப்பட்டனர். போத்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் யாழ்ப்பாணம் 32 கோவிற்பற்றுக்களாக பிரிக்கப்பட்டு இருந்ததுடன், அக்காலத்தில் நாற்பது அல்லது ஐம்பது குருக்கள் பணியாற்றியுள்ளனர்.[15] கிறிஸ்தவம் என்பது ஐரோப்பியம், ஐரோப்பியம் என்பது கிறிஸ்தவம் எனும் கருத்து வலுப்பெற்றிருந்தது. ஒருவன் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்வதாயின் ஐரோப்பியத்தை முற்றாக ஏற்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறான செயற்பாடுகள் இலங்கைத் தமிழ் மக்களின் மறையையோ, அவர்களின் பண்பாட்டு அம்சங்களையோ மதித்ததாக கூற முடியாதிருந்தது.

## 2.3. கல்வி

போத்துக்கேயரின் வருகையின் போது இலங்கையில் பாரம்பரிய கல்வி முறையே நிலவியது. ஆண்களுக்கான கல்விக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இலங்கையில் போத்துக்கேயரின் ஆட்சி நிலவிய காலப்பகுதியில் இக்கல்விமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. உயர் இலக்கிய இலக்கண, சமயக் கல்வி போன்றன கற்பிக்கப்பட்டன. எனவே இவர்களின் வருகையின் பின்னர் உயர் கல்வியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. கத்தோலிக்க மறைசார் கல்விக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. புதிய இலக்கிய, இலக்கண, சைவசமயம் சார் நூல்கள் தோன்ற வாய்ப்பில்லை.[16] மிஷனரிமார் கத்தோலிக்க மறையைப் பரப்ப கல்வியை ஊடகமாக பயன்படுத்திக் கொண்டனர். இக்காலத்தில் மறை பரப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கென பிரான்சிஸ்கன் சபை, இயேசு சபை, டொமினிக்கன் சபை, அகஸ்டினர் சபை என்பன இலங்கைக்கு வரவழைக்கப்பட்டனர்.

1543 இல் பிரான்சிஸ்கன் சபையினர் கோட்டை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் "கோயிற் பற்று" பாடசாலைகளை தோற்றுவித்தனர். இதில் மிஷனரிமார் எழுத்து, வாசிப்பு, போத்துக்கேய பண்பாடு, கத்தோலிக்க நெறி முறைகள் என்பவற்றை கற்பித்தனர். தலை சிறந்த மாணவர்களை கத்தோலிக்க மடாலயங்களுக்கு அனுப்பி மதகுருமார்களாக்கினர்.[17] செபம் செய்தல், மத அறிவு குறித்த வினா விடை என்பன சுதேச மொழியிலும் கிறிஸ்தவ சமய கீதங்கள், கீர்த்தனைகள், ஸ்தோத்திர பாடல், வாசிப்பு, எழுத்து போன்ற விடயங்கள் எழுத்தறிவூட்டும் நோக்குடன் பிரான்சிஸ்கன் சபையினர் கையாண்டனர். இவர்களால் பயன்படுத்தப்பட்ட கற்றல், கற்பித்தல் முறைகளுள் வினா, விடை கற்பித்தல் முறை இன்று வரையிலும் பயன்பாட்டில் உள்ளது.

---

15 குலேந்திரன். (1959). *தென்னிந்திய திருச்சபை: யாழ்ப்பாண ஆதினக் கைந்நூல்*. அமெரிக்க சிலோன் மிஷன் பிரஸ், மானிப்பாய், இலங்கை, பக். 3- 4.

16 சிவலிங்கராஜா, எஸ்., (2001). *ஈழத்து தமிழ் இலக்கிய செல்நெறி*. உயர் கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம், ப. 61.

17 ஜெபநேசன், எஸ்., (1983). *அமெரிக்க மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும்*, திருமகள் பிரஸ், சுன்னாகம், இலங்கை, ப. 21.

இயேசு சபையினரால் ஆரம்ப பாடசாலைகள் நடாத்தப்பட்டன. இங்கு நெடுங்கணக்கு வாசிப்பு. எழுத்து. பாட்டு. நற்பழக்கவழக்கம். கிறிஸ்தவ கோட்பாடுகள் என்பனவும் கற்பிக்கப்பட்டன. சுதேச மொழி மட்டுமன்றி இலத்தின். போத்துக்கேயம் போன்ற மொழிகள் கல்விக்கெனப் பயன்படுத்தப்பட்டன. நாடகத்தின் மூலம் (Role play) பாடசாலைகளில் கற்பிக்கும் முறையை அறிமுகப்படுத்தினர்.

பிரான்சிஸ்கன் சபையினர் உயர் கல்வியான கல்லூரிக் கல்வியை அளித்துள்ளனர். இக்கல்வி விசேட விதமாக மத குருமாராக வரவிருப்போருக்கு வழங்கப்பட்டது. இயேசு சபையினரும் உயர் கல்வியை புகட்டினர். அது ஆரம்ப. இடைநிலை. உயர்நிலை ஆகிய மூன்று பகுதிகளாக இயங்கின. மிஷனரிமார் இளவரசர்களுக்கான கல்வியைப் புகட்டும் முறையிலும் விசேட அக்கறை செலுத்தியுள்ளனர் இக்கல்வி ஐரோப்பிய அரச குடும்பத்து குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட கல்வியை ஒத்திருந்தது.[18] இவ்வாறு கல்வி நிலையில் பாரிய மாற்றங்கள் காணப்பட்டதை அவதானிக்கலாம்.

## 2.4. இலக்கியம்

போத்துக்கேயர் 1621 இல் ஈழத்தில் தமிழ் பேசும் பகுதிகளில் பெரும் பகுதியான யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.[19] இவர்கள் மறையைப் பரப்பும் நோக்குடன் செயற்பட்டதால் இக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்கள் கத்தோலிக்க மறை சார் இலக்கியங்களாகவே அமைந்துள்ளன. ஏற்கனவே மக்களின் பயன்பாட்டிலிருந்த இலக்கிய வடிவங்களுக்கு கத்தோலிக்க மறை சார் கருத்துக்களை புகுத்தி கிறிஸ்தவத் தமிழ் இலக்கியங்களைத் தோற்றுவித்துள்ளனர். மக்களால் வரவேற்கப்படும் இலக்கிய வடிவங்களான பள்ளு. அம்மானை. நாட்டுக்கூத்து என்பவற்றைப் பயன்படுத்தி கத்தோலிக்க மறை சார் இலக்கியங்களை தோற்றுவித்தனர். குறிப்பாக இக்காலப்பகுதியிலேதான் கத்தோலிக்க சமயத்தைப் புகழ்ந்து இயேசு நாதரைப் பட்டுடைத்தலைவராகக் கொண்டமையப் பெற்ற ஞானப்பள்ளுப் பிரபந்தம் தோற்றம் பெற்றுள்ளது.

1647இல் பேதுறு புலவரால் "சந்தியோகுமையார் அம்மானை" என்ற கிறிஸ்தவ அம்மானை இலக்கியம் தோற்றம் பெற்றது. இது சாதாரண மக்களுக்கும் விளங்கும் வகையில் பாடப்பட்டது.[20] அத்துடன் "ஞானானந்த புராணம்" என்னும் இலக்கியமும் கிறிஸ்தவ மத விளக்கமாக அமைந்துள்ளதுடன் "திருச்செல்வர் காவியம்" என்னும் இலக்கியமும் இக்காலத்தில் தோற்றம் பெற்றுள்ளது. இது கீழைத்தேய வாசனை கொண்ட ஓர் கதையமைப்பையும். கதாபாத்திரங்களையும் கத்தோலிக்க புனிதர் பட்டியலில் இருந்து தெரிந்து மக்கள் வாழ்வுடன் இணைந்து இழையோடும் காப்பியமாக இக்காப்பியம் காணப்படுகிறது. கத்தோலிக்க மறையைப் பரப்பும் நோக்குடன் நாட்டுக் கூத்துக்கள் பெருமளவில் கையாளப்பட்டுள்ளன.

---

18 தொன் பீற்றர்., (1969). "போர்த்துக்கேய மிஷனரிமார் கல்வி துறையில் ஆற்றிய பணி". *இலங்கையில் கல்வி நூற்றாண்டு விழா மலர்- பாகம்- I*, அரசாங்க அச்சகம். கொழும்பு. பக். 329- 331.

19 சிவலிங்கராஜா. எஸ்., பக். 60- 61.

20 மேலது. பக். 70- 74.

## 2.5. பொருளாதாரம்

போத்துக்கேயர் வருகை வர்த்தக நோக்கம் கருதியதாகவே இருந்தது. லோறென்சோ டி அல்மெய்டா கோட்டை இராசதானிக்கு அரசனாயிருந்த தர்ம பராக்கிரமபாகுவுடன் வியாபார உடன்படிக்கை செய்துகொண்டார். அவர்களிடையே பொருளாதார ரீதியிலான ஒப்பந்தம் ஒன்றும் காணப்பட்டது. அதாவது வருடா வருடம் அவர்களுக்கு அரசன் கறுவா பண்டத்தை தருவதாகவும், இவர்கள் கோட்டை அரசு துறைமுகம் என்பவற்றை பாதுகாப்பதாகவும் உறுதியளித்தனர்.[21] இலங்கையில் ஆரம்ப காலத்தில் விவசாயமே முக்கியத்துவம் பெற்றிருந்தது. போத்துக்கேயர் இலங்கையில் அதிகம் விளையக்கூடிய பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். இலங்கை அரசுக்குரிய இலாபம் வர்த்தகப் பொருட்களால் கிடைக்கப்பெற்றது.[22]

## 2.6. பண்பாடு

கருத்துப் பரிமாற்றத்தில் முக்கிய இடம் வகிப்பது "மொழி" ஆகும். போத்துக்கேயரின் வருகையின் பின்னர் போத்துக்கேய மொழிச்சொற்கள் மக்களின் பயன்பாட்டில் காணப்பட்டது. விறாந்தை, யன்னல், கொரடா, சாவி போன்ற இன்னோரன்ன சொற்கள் இலங்கைத் தமிழர் பயன்படுத்தினர். மக்களின் பழக்கவழக்கம், உணவு, உடை, வழிபாட்டுமுறை, வாழ்க்கைத்தரம், என்பன மாற்றப்பட்டன. இக்காலத்தில் சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டதுடன், சாதிக்கட்டுப்பாட்டு கொடுமைகள் குறைவடைந்தது எனலாம். நாடகக்கலை, கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என்பனவும் வளர்ச்சி கண்டன.[23]

# 3. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இலங்கைத் தமிழரின் வாழ்வு.

## 3.1. ஒல்லாந்தரின் இலங்கை வருகை (கி. பி. 1658– 1796)

போர்த்துக்கேயருக்கு போட்டியாக கீழைத்தேய வர்த்தகத்தை தம்வசப்படுத்தும் நோக்கில் ஒல்லாந்தர் இலங்கைக்கு விஜயம் செய்தனர். இவர்களின் வருகையினால் இலங்கைத் தமிழ் மக்களின் சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. இவர்கள் புரட்டஸ்தாந்து மறையைப் பரப்ப கல்வியை ஊடகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

## 3.2. சமயம்

ஒல்லாந்தரும் மக்களை புரட்டஸ்தாந்து மறையில் இணைக்கும் நோக்குடன் செயற்பட்டனர். இவர்கள் யாழ்ப்பாணம் முழுவதையும் 32 கோயில் பற்றுக்களாகப் பிரித்தனர். இராச கட்டளைகளுக்குப் பயந்து ஞாயிறு தோறும் ஆயிரக்கணக்கானோர் ஆராதனைகளுக்கு வந்தனர்.[24] இவர்கள் ஆன்மீக ஆர்வத்துடன் மறையைப் பரப்பாது, முதலாளித்துவப் பொருளாதார வாழ்வைக் கட்டியெழுப்பும் நோக்குடனேயே செயற்பட்டனர்.

இக்காலத்தில் போர்த்துக்கேயரின் கத்தேலிக்க மதத்தை பின்பற்ற தடைவிதிக்கப்பட்டதால் கத்தோலிக்கம் அழியும் நிலைக்கு உள்ளாகியது. ஆயினும் சைவ சமயத்தவர்கள் தங்கள்

---

21 கிருஷ்ணராசா, செ., பக். 62- 63.

22 ஜெயசீலன், J. E., (1997), *யாழ்ப்பாண திருச்சபை வரவாறு*, வளன் ஆச்சிரமம், யாழ்ப்பாணம், பக். 14- 15.

23 புஸ்பரட்ணம், P., பக். 23-24.

24 வேலுப்பிள்ளை, சி. டி., (1984), *அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம்*, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், பக் 24- 27.

சமய ஆச்சாரங்களை கைக்கொண்டொழுகுவதற்கு தடைகள் இருக்கவில்லை.[25] அனைத்துச் சலுகைகளும் புரட்டஸ்தாந்து மதத்தைப் பின்பற்றியவர்களுக்கு வழங்கப்பட்டதால் அநேகர் அம்மறையைத் தழுவிக் கொண்டனர்.

### 3.3. கல்வி

ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து மதத்தை பரப்ப கல்வியை ஊடகமாகப் பயன்படுத்தினர். ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் கல்வியும் அவற்றோடு இணைந்த நிறுவனங்களும், மக்களின் வாழ்க்கை நலன்களும் ஒன்றோடு மற்றொன்று பின்னிப் பிணைந்து இருந்தன.[26] மாணவர்கள் உயர்கல்வியைக் கற்கும் வாய்ப்பை பெற்றது மட்டுமல்லாது, மதப்பிரச்சாரம் மேலோங்கிக் காணப்பட்டது. இவர்களின் கல்வி நிறுவனங்களின் அடிக்கல்லாக 'பாடசாலைச் சபை' 1663 இல் அமைந்தது. இச்சபை அக்காலப்பகுதியில் கல்வி, திருமண விடயங்களைக் கவனித்தது.[27]

இக்காலப் பகுதியில் கோயில்பற்றுப் பாடசாலைகளை நிறுவி சுதேசிகளை ஆசிரியர்களாக நியமித்தனர். சுதேசிகளுக்கு குறைந்த சம்பளம் வழங்கி இலாபத்தைப் பெற்றுக் கொள்வதும் இவர்களின் நோக்கங்களில் ஒன்றாகும். இப்பாடசாலைகளில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் கற்பிக்கப்பட்டன. இங்கு எழுத்து, வாசிப்பு, கிறிஸ்தவக் கோட்பாடுகள் என்பன தெளிவாக கற்பிக்கப்பட்டன. கட்டாயக் கல்வி முறை இக்காலப் பகுதியில் காணப்பட்டது. அதுமட்டுமல்லாது செமினரிக் கல்வியும் இக்காலப் பின்னணியில் வழங்கப்பட்டது. இதில் கிரேக்கம், லத்தின் ஆகிய மொழிகள் போதிக்கப்பட்டன. செமினரிகளில் கல்வி பயின்றவர்கள் லெய்டன் (Leyden) பல்கலைக் கழகத்திற்கு செல்ல வாய்ப்பு கிடைத்தது மட்டுமல்லாது, அரசாங்க உத்தியோகமும் வழங்கப்பட்டது.

ஆண், பெண் இருபாலாருக்குமான அனாதை இல்லங்களும் இவர்களால் நிறுவப்பட்டன. ஆண்களுக்கு வர்த்தகமும், பெண்களுக்கு தையல், பின்னல், நூல் நூற்றல் போன்ற சுயதொழில் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இக்காலப்பகுதியில் பெண்கள் அடிப்படைக் கல்வியை கற்க வேண்டும் என பெண் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைக்குமாறு பெற்றோர் வேண்டப்பட்டனர். இக்காலத்தில் கட்டாயக் கல்வி முறையும், பாடசாலைக்கு சமூகமளிக்காதவர்கள் குற்றப்பணம் அறவிட வேண்டும் என்ற சட்டமும் காணப்பட்டுள்ளது. இதனால் பெரும் தொகையான பெண்கள் பாடசாலைக்குச் சென்றனர். பொதுவாகப் பெண் கல்வியில் தோத்திர பாடல், வேத வினாவிடை என்பன இடம் பெற்றன.[28] அடிமைகளும் கல்வி கற்க வேண்டும் என்னும் நோக்குடன், இக்காலப்பகுதியில் அவர்களுக்கான கல்வி வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

### 3.4. இலக்கியம்

இக்காலப்பகுதியில் தமிழ், சிங்கள மொழிகளில் இலக்கியங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் சைவ சமயம் சார் இலக்கியங்கள் தோன்றவில்லை. ஆயினும்

---

25 நடராசா, க. செ., (1982). *ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி*, திருமகள் அச்சகம், சுன்னாகம், இலங்கை, பக். 28- 29.

26 கிருஷ்ணராசா, செ., பக். 242- 243.

27 மொத்தாவு, S.A.W., (1969), "ஒல்லாந்தர் காலத்தில் கல்வி நிலை", *இலங்கையின் கல்வி நூற்றாண்டு விழா மலர்- பாகம்- I*, அரசாங்க அச்சகம், கொழும்பு, ப. 353.

28 மேலது, ப. 359.

ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் சைவ சமயம் சார் இலக்கியங்களும் தோற்றம் பெற்றுள்ளன. சோதிடம், வைத்தியம் சார் இலக்கியங்களும் தோற்றம் பெற்றள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றுள் அமுதாகாரம், சந்தான தீபிகை போன்ற நூல்கள் முக்கியமானவை. வரலாறு சார் நூல்களுள்யாழ்ப்பாணவைபவமாலைஎன்னும்நூல்இக்காலப்பகுதியில்தோற்றம்பெற்றுள்ளது.[29] அத்துடன் பள்ளு, குறவஞ்சி போன்ற நாடக இலக்கியங்களும் தோற்றம் பெற்றுள்ளன.

### 3.5. பொருளாதாரம்

இவர்கள் சிக்கன பொருளாதார முறையைக் கையாண்டார்கள். இம்முறைப்படி குறைந்த செலவில் நிறைந்த வருமானத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இவர்கள் இலங்கையில் இருந்து கறுவாவை எடுத்துச் சென்றதுடன், பாக்கு, யானைகள், சிப்பிகள் முதலியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.[30] ஏற்றுமதி வர்த்தக முறை இக்காலப் பகுதியில் பெரும் வளர்ச்சி கண்டது. கோப்பி, ஏலம், மிளகு, தென்னை போன்றவற்றின் உற்பத்தியை அதிகரித்து பெருந்தோட்ட பயிர்ச் செய்கை முறையையும் உருவாக்கினர். சதுப்பு நிலங்களைத் திருத்தி அவற்றை நெல் நிலங்களாக்கினர். அத்துடன் வரி விதிக்கும் முறையும் காணப்பட்டது. அதில் அதிகளவான இலாபத்தைப் பெற்றுக் கொண்டனர்.[31]

## 4. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வுப் பின்னணி

### 4.1. பிரித்தானியரின் இலங்கைக்கான வருகை. (கி. பி. 1796– 1948)

இலங்கை 1796 இல் ஒல்லாந்தரின் ஆட்சியிலிருந்து விடுபட்டு பிரித்தானியரின் முடியாட்சிக்கு உட்பட்டது. இவர்களின் ஆளுகையின் போதும் இலங்கையில் அரசியல், சமூக, சமய, பண்பாட்டு ரீதியிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் ஆங்கிலக் கல்வியும் அரச பதவியும் சமூக அந்தஸ்த்தைக் கொடுக்கும் கருவிகளாகத் திகழ்ந்தன. சைவ சமயத்தவரும் கிறிஸ்தவத்திற்கு மாறி, ஆங்கிலம் கற்று அரசப் பதவிகளைப் பெற்று மேலைத்தேய கலாச்சாரத்தில் கவர்ச்சி கொண்டோராய்த் திகழ்ந்தனர்.[32]

### 4.2. சமயம்

இக்காலப்பகுதியில் அனைத்து மக்களுக்கும் 'மதச்சுதந்திரம்' வழங்கப்பட்டது. மக்கள் பகிரங்கமாக வழிபாடுகளை மேற்கொண்டார்கள். 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் காணப்பட்டது போல் 19 ஆம் நூற்றாண்டிலும் கிறிஸ்தவ மிஷனரிமார்களின் மதமாற்ற முயற்சிகள் தீவிரமடைந்தது. இக்காலத்தில் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மிஷனரிமார்களுடன் அமெரிக்க, வெஸ்லியன் மிஷனரிமாரும் மதப்பிரச்சார பணிகளில் ஈடுபட்டனர்.[33]

---

29 சிவலிங்கராஜா, எஸ்., பக். 253- 254.

30 கிருஷ்ணராசா, செ., பக். 253- 254.

31 கணபதிப்பிள்ளை, க., பக். 29- 30.

32 இரகுநாதன், ம.,(1997), "ஈழத்து தமிழ் புனைக்கதைகளின் முக்கிய போக்குகள்" *ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றுக் கருத்தரங்கு*, தமிழ்த் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, ப. 02.

33 மௌனகுரு, சி. சித்திரலேகா, மௌ, எங்ஃமான், (1979), *இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம்*, சித்திரா அச்சகம், யாழ்ப்பாணம், பக். 7- 8.

இக்காலக்கட்டத்தில் கிறிஸ்தவ மதம், ஆங்கிலக் கல்வி, உயர் பதவிகள் என்பன ஒன்றோடு ஒன்று இணைந்திருந்தன. அதனால் ஆங்கிலக் கல்வி, உயர் பதவிகளை நாடுவோர் கிறிஸ்தவர்களாவது இயல்பாயிற்று. இக்காலத்தில் மிஷனரிமார் உரைநடையைப் பயன்படுத்தி சமயப் பிரச்சாரத்தை மேற்கொண்டார்கள். யாழ்ப்பாணத்தில் அச்சு கூடங்களை நிறுவி சமய தேவைக்கென பத்திரிகைகள், துண்டு பிரசுரங்கள் முதலியவற்றை வெளியிட்டனர். இவ்வாறு பிரித்தானியரின் ஆட்சிக் காலத்திலும் இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வில் பன்முகத் துறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை பார்க்கலாம்.

### 4.3. கல்வி

கல்வி வளர்ச்சியை நோக்கின் இக்காலப்பகுதியில் ஆங்கிலக் கல்வியே அதிகளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது. பிரித்தானியரும் மேலைநாட்டு முறைப்படி பாடசாலைகளையும், கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் அமைத்தனர்.[34] 1834 ஆம் ஆண்டு 'பாடசாலை ஆணைக்குழு' பாடசாலைக் கல்வியை மேற்பார்வை செய்யும் முறையை அறிமுகம் செய்தது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அதிகளவு பாடசாலைகள் காணப்பட்டமையால் கல்வி வாய்ப்புக்கள் அதிகமாக தமிழருக்குக் கிடைத்துள்ளன.[35]

அமெரிக்க, மெதடிஸ்த, அங்கிலிக்கன், வெஸ்லியன் மிஷன்கள் இக்காலத்தில் கல்விப் பணியில் ஈடுபட்டனர். அச்சு வசதி, வசனநடை வளர்ச்சி, பத்திரிகைத் தோற்றம் என்பவற்றையும் இக்காலத்தில் பார்க்கலாம். 20 ஆம் நூற்றாண்டில் நாவல், சிறுகதை வளர்ச்சிக்கும் ஏற்ற சூழலை இக்காலம் ஏற்படுத்திக் கொடுத்தது எனலாம்.[36]

கோயில்பற்றுப் பாடசாலைகளில் சுயமொழிக் கல்வியே வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மேல்நிலைப் பாடசாலைகளும், மிஷனரிப் பாடசாலைகளும் இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்றுள்ளன. ஆங்கிலக் கல்வியைக் கற்பிப்பது, மாணவர்களை அக்கடமிக்கு ஆயத்தம் செய்வதும் இப்பாடசாலைகளின் முக்கிய நோக்கங்களாகும்.

பிரித்தானியரின் ஆட்சி இலங்கையில் நிலவிய காலப்பகுதியில் அமெரிக்க மிஷனரிகளின் கல்விப் பணியும் சிறப்புற்றது. இவர்கள் ஆரம்பப் பாடசாலைகளை கிராமங்களில் நிறுவினர்கள். சாதி சமய வேறுபாடின்றி அனைவரும் இப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.[37] இவர்களின் கல்வி முயற்சியில் பெண்கல்வியும் சிறப்பிடம் பெறுகின்றது. 1824 இல் பெண்களுக்கென உடுவில் மகளிர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.[38] இம்மிஷனரிமாரால் தோற்றுவிக்கப்பட்ட இப் பாடசாலையே ஆசியாவில் முதன்முதல் தோன்றிய பெண்கள் விடுதிப் பாடசாலையாகும். இதில் ஏழை மாணவர்களுக்கும் இடம் அளிக்கப்பட்டது.

1823 இல் வட்டுக்கோட்டைச் செமினரி ஆரம்பிக்கப்பட்டது. இக் கல்லூரி தமிழ் உரைநடை வளர்ச்சியிலும், பத்திரிகை வளர்ச்சியிலும் தீவிர கவனத்தைச் செலுத்தியது. இக்கல்லூரி தமிழ்மொழியின் சமயச் சார்பினை நீக்கி அதனை மதச் சார்பற்ற மொழியாக்கியது. இக்

---

34 வெங்கடசாமி. சீனி.. (2003). *19ம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம்*, அன்னை நிலையம், சென்னை. பக். 82- 84.

35 திலகரட்ணம். இ.. (2005). "பாரம்பரியம் ஒரு மீள் பார்வை" *கலைமுகம்: கலை இலக்கிய சமூக இதழ்*. திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம். பக். 55- 56.

36 மௌனகுரு. சி. சித்திரலேகா. மௌ., எம்.ஏ.நுஃமான். பக். 10- 12.

37 ஜெயநேசன். எஸ்.. பக். 26- 27.

38 மேலது. ப. 32.

செமினரியில் கற்ற மாணவர்கள் தமிழ் மொழிக்கு தொண்டாற்றினர்.[39] இக்காலப் பகுதியில் அகராதி பணியையும் அமெரிக்கன் மிஷனரிமார் மேற்கொண்டனர். தமிழ் - தமிழ் அகராதிகள். ஆங்கில - தமிழ் அகராதிகளையும் தோற்றுவித்துள்ளனர்.

## 4.4. இலக்கியம்

17 ஆம் நூற்றாண்டு முதலாக ஈழத்தில் நாடகங்கள் சிறப்பிடம் பெறத் தொடங்கின. போர்த்துக்கேயர். ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தை விடவும் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சமயத்தின் தாக்கம் இலக்கியத்தில் அதிக இடம் பிடித்திருந்தது.[40]

இக்காலத்தில் உலகியல் சார் இலக்கியங்கள். இலக்கண நூல்கள் தோற்றம் பெற்றுள்ளன. அச்சு இயந்திர சாலைகளும் நிறுவப்பட்டன. இவ் அச்சகங்களின் உதவியுடன் பல நூல்கள். துண்டுப் பிரசுரங்கள். பத்திரிகைகள். சஞ்சிகைகள் வெளியிடப்பட்டன. மேலைத்தேய கல்வி முறை காரணமாக மேலைத்தேய இலக்கியங்களும் தமிழிற்கு வளம் சேர்த்துள்ளன. இக்காலத்தில் ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் சிலர் ஆங்கில மொழியைப் பயின்று அம்மொழியில் தமிழர் தம் நாகரிகம். பண்பாடு. இலக்கியம் முதலியவற்றை விளக்க முற்பட்டனர்.[41] இவர்களின் காலத்தில் நவீன நாடகமுறை தோற்றம் பெற்றதால் கூத்து பின்தங்கிய நிலையடைந்தது. படித்தவர்கள் கூத்தினை புறக்கணித்தார்கள். இந்நிலையில் நாட்டுக் கூத்தின் இடத்தை நவீன நாடகம் பிடித்தது. இக்காலத்தில் நாடகத்தில் மேலைத்தேய அமைப்பு முறை பின்பற்றப்பட்டுள்ளது.

## 4.5. பொருளாதாரம்

பிரித்தானியருடன் இலங்கையில் வரலாற்றில் புது அத்தியாயம் ஒன்று ஆரம்பிக்கின்றது. அவர்கள் புகுத்திய பொருளாதார அமைப்பினாலும். நவீன நாகரிகத்தினாலும் இலங்கையின் பழைய மரபுகள் மறையத் தொடங்கின. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் இலங்கை முழுவதும் செய்திப் போக்குவரத்துக்கள் பெருகி நாடு முழுவதும் ஒரே நிர்வாக அமைப்பு பெற்றது. மானிய முறைகள் பொருட்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தியும். மக்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தியும் இருந்த அனைத்து தடைகளும் நீக்கப்பட்டன. இதன் வழியாக பிரித்தானியர் இலங்கையில் முதலீடு செய்ய வாய்ப்புக் கிடைத்தது. தொழில் முனைவோருக்கு நிலம் மிகுதியாக வழங்கப்பட்டது. கி.பி.1830 ஆம் ஆண்டு முதல் பணப்பயிர்களை விளைவிக்கத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.[42]

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பொருளாதார அமைப்பின் பெருந்தோட்ட பயிர் செய்கை முக்கியத்துவம் பெற்றது. இதனால் நாட்டுக்கு பல நன்மைகள் கிடைத்தன. உள்நாட்டு வர்த்தகமும். வெளிநாட்டு வர்த்தகமும் அதிகரித்தது. தேயிலை. கோப்பி. இறப்பர் போன்றன தோட்டங்களில்

---

39 மேலது. பக். 36- 43.

40 நடராசா. F. X. C., (1970). *ஈழத்து தமிழ் நூல் வரலாறு*. குமரன் அச்சகம். கொழும்பு. பக். 19- 20.

41 மேலது. பக். 24- 26

42 பாலுசாமி. நா., (1987). *வாழ்வியல் களஞ்சியம் தொகுதி - 4*. தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர். ப. 285.

பயிரிடப்பட்டன. இத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு சிங்களவர் விரும்பாததால் இந்தியாவில் இருந்து தமிழ்த் தொழிலாளிகளை இலங்கைக்கு பிரித்தானிய அரசு வரவழைத்தது.[43]

தோட்டத் தொழில் பெருக்கத்தினால் போக்குவரத்து, வங்கி, துறைமுகம் போன்ற துறைகள் வளர்ச்சிக் கண்டன. இக்காலப்பகுதியில் இராசகாரிய முறை, ஏகபோக உரிமை என்பன ஒழிக்கப் பட்டமையால் தனியார்துறை முன்னேறியதுடன் முதலாளித்துவ சமுதாயத்தைத் தோற்றுவித்தது. மானியமுறை நீங்கி புதிய சமுதாயமுறை தோன்றியது.[44] இவ்வாறு பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இலங்கை தமிழ்ச்சமூகத்தில் ஏற்பட்ட சில மாற்றங்களை நோக்கலாம்.

## முடிவுரை

இவ் ஆய்வில் கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன் இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வியல் அம்சங்களை ஆய்வு செய்து தெளிவுபடுத்துவதன் மூலம், கிறிஸ்தவத்தின் வருகையின் பின் ஏற்பட்ட மாற்றங்களை தெளிவாக நோக்கக் கூடியதாய் இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆய்வில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் குறித்த தெளிவான விளக்கங்களும், அவர்களின் வருகை இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய மாற்றங்களையும் ஒப்பிட்டு நோக்கக் கூடியதாய் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கிறிஸ்தவத்தின் வருகையின் பின் இலங்கைத் தமிழ் மக்களிடையே தீவிரம் அடைந்திருந்த சாதிய முரண்பாடுகள் சிறிதளவு தளர்வடைந்தது. இக்காலப்பகுதியில் சாதாரண மக்களுக்கும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் நாட்டுக்கூத்து, நாடகம் போன்ற இலக்கிய வடிவங்கள் மிஷனரிமாருக்கு சமயம் பரப்பும் நடவடிக்கைகளில் பெரிதும் துணை நின்றன எனலாம். கல்வித்துறையிலும் பாரிய மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. குறிப்பாக ஆண், பெண் இருபாலாருக்குமான கல்வி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. இலக்கியத்தில் செய்யுள் நடை இலக்கியப்போக்கு மாறி, வசனநடை இலக்கியங்கள் தோற்றம் பெற்றமையால் இலக்கியத்தில் இலகுவான போக்கு தோன்றியது.

பொருளாதாரத் துறையை நோக்கின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலப்பிரபுத்துவ பொருளாதாரக் கொள்கைகள் கிறிஸ்தவத்தின் வருகையுடன் வர்த்தக பொருளாதாரக் கொள்கைகளாக மாற்றப்பட்டன. இது போன்ற வளர்ச்சி நிலைகள் காணப்பட்டதுடன், சில பாதகங்களையும் நோக்கக்கூடியதாயுள்ளது. இக்காலப்பகுதியில் சமயக் கல்விக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டமையால் ஏனையதுறைசார் கல்வியில் பாரிய வளர்ச்சிக் காணப்பட்டது என கூற முடியாதுள்ளது. ஐரோப்பியர்களின் குடிவகைகளின் பாவனை சில சமுகச் சீர்கேடுகளை ஏற்படுத்த வாய்ப்பாய் இருந்திருக்கலாம். பொருளாதார துறையில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டதால் வேளாண்மை பாதிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் இது போன்ற

---

43 நாகராஜன், எஸ்., (1989), *அயல் நாடுகளில் தமிழர்*, சர்மாஸ் ஸான்டோரியம் அச்சகம், புதுக்கோட்டை, ப. 48.

44 நாகேந்திரன், ச., (1968), "கோல்புறுக் கமறன் சீர்திருத்தங்கள்", *இளங்கதிர்*, தமிழ் சங்கம் இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை, ப. 48.

இன்னோரன்ன பாதக நிலைகளும் ஏற்பட்டிருப்பினும் கிறிஸ்தவத்தின் வருகை இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வில் பல்வேறு அம்சங்களிலும் மற்றங்களை ஏற்படுத்தியுள்ளதென்பது மறுப்பதற்கில்லை.

## உசாத்துணை நூல்கள்


1. இரகுநாதன்..ம. "யாழ்ப்பாணத்தில் சாதியும் மதமும் ஈழத்து தமிழ் நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேடல்". *யாழ்ப்பாணம் மொழியும் வாழ்வும்*. கரிகணண் பிரின்டேர்ஸ். இல 424. காங்கேசன் துறைச்சாலை யாழ்ப்பாணம். 2006.
2. இரகுநாதன். ம.. "ஈழத்து தமிழ் புனைக்கதைகளின் முக்கிய போக்குகள்" *ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றுக் கருத்தரங்கு*. தமிழ்த் துறை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை. 1997.
3. கணபதிப்பிள்ளை. க.. *ஈழத்து வாழ்வும் வளமும்*. சித்ரா பிரிண்டேர் கிராபி. மெட்ராஸ். 1962.
4. கந்தவனம். வி.. *பொன்விழா மலர் : யாழ் மாநகராட்சி மன்றம்* ( 1949-1999). போஸ்கோ பதிப்பகம். நல்லூர். 2002.
5. கிருஷ்ணராசா. செ.. *இலங்கை வரலாறு - பாகம் II*, திருமகள் அழுத்தகம். சுன்னாகம். யாழ்ப்பாணம். 2002.
6. குலேந்திரன்.. *தென்னிந்திய திருச்சபை: யாழ்ப்பாண ஆதினக் கைந்நூல்*. அமெரிக்க சிலோன் மிஷன் பிரஸ். மானிப்பாய். இலங்கை. 1959.
7. குகபாலன். கா.. *இலங்கை பழங்குடிகள்* (வனக்குறவர் வாழ்வியல் ஆய்வு) பரணன் அசோசியேட்ஸ் பிறைவேட் லிமிடெட். கொழும்பு. 2000.
8. குணராசா. க.. *ஈழத்தவர் வரலாறு* (கி. பி 5ம் நூற்றாண்டிலிருந்து கி. பி 1621 ஆம் ஆண்டு வரை). பூபாலசிங்கம் பதிப்பகம். கொழும்பு. 1996.
9. சபா ஜெயராசா. யாழ்ப்பாணத்து மரபு வழிக் கல்வி. போஸ்கோ பதிப்பகம். நல்லூர். 2000.
10. சிவலிங்கராஜா. எஸ்.. *ஈழத்து தமிழ் இலக்கிய செல்நெறி*. உயர் கல்வி நிறுவனம். யாழ்ப்பாணம். 2001.
11. திலகரட்ணம். "பாரம்பரியம் ஒரு மீள் பார்வை" *கலைமுகம் : கலை இலக்கிய சமூக இதழ்*. திருமறைக் கலாமன்றம். யாழ்ப்பாணம். 2005.
12. தொன் பீற்றர்.. "போர்த்துக்கேய மிஷனரிமார் கல்வி துறையில் ஆற்றிய பணி", *இலங்கையில் கல்வி நூற்றாண்டு விழா மலர் - பாகம்- I*, அரசாங்க அச்சகம். கொழும்பு. 1969.
13. நடராசா. க. செ.. *ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி*. திருமகள் அச்சகம். சுன்னாகம். இலங்கை. 1982.
14. நடராசா. F. X. C.. *ஈழத்து தமிழ் நூல் வரலாறு*. குமரன் அச்சகம். கொழும்பு. 1970.
15. நாகராஜன். எஸ்.. *அயல் நாடுகளில் தமிழர்*. சர்மாஸ் ஸான்டோரியம் அச்சகம். புதுக்கோட்டை. 1989.
16. நாகேந்திரன். ச.. "கோல்புறுக் கமறன் சீர்திருத்தங்கள்". *இளங்கதிர்*. தமிழ் சங்கம் இலங்கைப் பல்கலைக்கழகம். பேராதனை. 1968.

17. பத்தவத்சல பாரதி, *பண்பாட்டு மானிடவியல்,* மாணிக்கவாசகர் ஆப் செட் பிரிண்டர்ஸ், சென்னை, 1990.

18. புஸ்பரத்தினம், P., *இலங்கையர்கள் பற்றிய கல்வி* (Sri Lankan Studies) வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், 2004.

19. மொத்தாவு, S.A.W., "ஒல்லாந்தர் காலத்தில் கல்வி நிலை", *இலங்கையின் கல்வி நூற்றாண்டு விழா மலர் - பாகம் -I,* அரசாங்க அச்சகம், கொழும்பு, 1969.

20. மௌனகுரு, சி, சித்திரலேகா, மௌ, எங்ஃமான், *இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம்,* சித்திரா அச்சகம், யாழ்ப்பாணம், 1979.

21. வெங்கடசாமி சீனி., *19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்,* அன்னை இல்லம், சென்னை, 2003.

22. வேலுப்பிள்ளை, சி, டி., *அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம்,* திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1984.

23. ஜெபநேசன், எஸ்., *அமெரிக்க மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும்,* திருமகள் பிரஸ், சுன்னாகம், இலங்கை, 1983.

24. ஜெயசீலன், J. E., *யாழ்ப்பாண திருச்சபை வரவாறு,* வளன் ஆச்சிரமம், யாழ்ப்பாணம், 1997.

25. Anton Mathias, (1992), *The Catholic Church in Jaffna*, (1875-1925) Good Shepherd Center , Ealalai, P. 53.